Registered as a News Paper Ceylon in விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தமிழ் பெயர் எண்; 49
போன் 389 தேசிய தினசரி இதழ் 348

வருஷம் 15 தமிழ் 15 தங்கிழமை (29-1-72)

வருவதற்கே மயிர்செய்.
—ஔவையார்.

தைப்பூச தினத்தன்று வித்தியாரம்பம் செய்பவர்களுக்குத் தேவைப்படும் "அரிச்சுவடி" பட்டைகளை அத்தாட்சி காட்டி இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

மிலிக் வைற் சோப்
தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

நில உச்ச வரம்பு மசோதா அடுத்த மாதம் வருகிறது

ஐம்பது ஏக்கருக்கு மேல் உரிமை பாராட்டமுடியாது

கொழும்பு,வெள்ளி

நில உச்சவரம்பு மசோதா அடுத்த மாதமத்தியில் ஆட்சிமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது. ஐம்பது ஏக்கர் நிலத்துக்குமேல் யாரும் பிரசாந்தம் கொண்டாட முடியாததாக இச் சட்டம் உச்சவரம்பு விதிக்குமென அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக நமது நிருபருக்களிடத்து பேட்டி பொறிக் காணி விவசாய அமைச்சர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ நாம் நமது பாத்தையைகுறிப்பிட்டகாலத்துக்கு முன்னதாகவே திருப்திகரமாகச் செய்துவிட்டதாகவும் இதில் நாம் வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்த நேரத்தில் இதுபற்றி நாம் முழுவிபரத்தையும் தெரிவிக்க விரும்பவில்லையென்றும் இப்போது அவ்விதம் தெரிவிப்பது சில சமயங்களில் நல்லதாக இருக்காது எனத்தாம் கருதுவதாகவும் தெரிவித்தார். (ந.)

நாளை பூரண சந்திர-ரகணம்

கொழும்பு,வெள்ளி

இம்மாதம் 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.15க்கு இலங்கையில் பூரண சந்திர கிரகணம் தென்படும் என்று அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செய்தி ஒலிபரப்பு மர்மம்

துலங்கவில்லை

கொழும்பு வெள்ளி

வானொலியில் இரவு ஒலிபரப்பு முடிந்தபின் மந்திரிசபை மாற்றம் பற்றி ஒலிபரப்பான செய்திகுறித்து விசாரணைசெய்துவந்தபொலிசார் அந்த மர்மத்தைக் கண்டு பிடித்துள்ளனர். பொலிஸ் சந்தியில் ஒலி அலைகளைபியுடன் ஒலிப்பதிவுக் கருவியொன்று இணைக்கப்பட்டிருந்ததன் விளைவாகவே மர்மச்செய்தி ஒலிபரப்பு நடந்ததாம். இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் ஆராய்ச்சி மகாநாடு ஏற்பாடுபற்றி ஆலோசனை

யாழ்ப்பாணம், சனி

நான்காவது அகில உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு எடுத்தவருடம் ஜனவரி மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதை யொட்டி அதற்கான ஏற்பாடுகளைபற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் இன்று சனிக்கிழமைமாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டைச் சிறப்பாக நடத்துவது பற்றி யாழ்ப்பாணப் பிரமுகர்கள், கல்விமான்கள் மற்றும் பலரும் இக்கூட்டத்தில் ஆலோசனை கூறவிருக்கின்றனர் என பிரதானிநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற விருக்கிறது.

இந்திராவுடன் பேச்சு

புதுடில்லி, ஜன. 28

உலகை வலம்வந்த தலைவர் திரு மல்லையாவை இன்று இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தியையும் நிதி அமைச்சர் திரு வை பி. சவானையும் சந்தித்துப் பேசினார். இந்தியாவுக்கு உலக வங்கியின் உதவி தொடர்ந்து கிடைக்கும் என அவர் தெரிவித்ததாகத் தெரிய வருகிறது.

பெப் 1ம் திகதி நியமனம்

கொழும்பு,வெள்ளி

ஜி.சி.ஈ. உயர்தர தரம் பெற்ற விஞ்ஞான கலைத் ஆசிரியர்களுக்கான நியமனம் எடுத்தமாதம் 1ம் திகதி தொடக்கம் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான பட்டியல் வடமாநிலக் கல்விக்குழுவுக்கு கல்வி அமைச்சு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. எனினும் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட எல்லாருக்குமே நியமனம் கிடைத்துவிடா தென்றும் இலாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடியரசுதின இலக்கிய போட்டி

கோப்பாய், வெள்ளி

இலங்கை குடியரசு தினத்தை யொட்டி இலக்கிய கவிதைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மிகச்சிறந்த இலக்கியக் கட்டுரைக்கு 2500ரூபாவும், சிறந்த கவிதைக்கு 1000 ரூபாவும் வழங்குவதாகக் கலாச்சார அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழரசுக்கட்சி சிறப்பு மகாநாடு இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், சனி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிறப்பு மகாநாடு இன்று ஆரம்பமாகிறது.

இன்று நடைபெறும் விஷயங்களைக் கட்டம் வாழ்த்தரான்லி விதியிலுள்ள "கலையகத்தில்" நடைபெறும் இக்கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்துகொள்வர்.

நாளைய நிகழ்ச்சி நிரல்

நாளைகாலை 9 மணிக்குசெல்வி கலா அரசப்பா சகோதரிகளின் தேசிய கீதத்தைத் தொடர்ந்து திரு. எஸ் ஜே. வி செல்வநாயகம் கொடி யேற்றிவைப்பார்

காலை 9-30 மணிக்கு அமரர் நாகநாதன் அரங்கில் அரசியல் மகாநாடு ஆரம்பமாகும் திரு. நா. த. செல்வத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார் திரு.சி மு இராசமாணிக்கம் தலைமைப் பேருரை நிகழ்த்துவார்.

மாலை 4 மணிக்கு கம்மாக ஏன் முடியாது" என்ற பொருள்பற்றிக் கவியரங்கு ஆரம்பமாகும். கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இக்கவியரங்கில் கவிஞர்கள் காசி ஆனந்தன், க. சவ. ஐயாத்துரை, வே. குமாரசுவாமி, முத்துச்சிவன், மு. திருநாவுக்கரசு, கவியுவன், கரவைகிழார், வன்னிமூர்க் கவிராயர் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம் திரு சி மு இராசமாணிக்கம் தலைமையில் ஆரம்பமாகும். கூட்டத்துக்கு தமிழரசு ஆட்சி மன்ற உறுப்பினர்களும் மற்றும் பிரமுகர்களும் உரை நிகழ்த்துவார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி
சிறப்பு மகாநாடு
30—1—72
இடம்: யாழ். நகர மண்டபம்
நிகழ்ச்சிகள்
காலை 9 மணி- அரசியல் மகாநாடு
மாலை 4 மணி- கவியரங்கு
" 6 மணி- பொதுக்கூட்டம்
—வரவேற்புக்குழு
குறிப்பு— நிகழ்ச்சிகளுக்குப்பின் இரவு 11-30 வரை சகல பாதைகளிலும் பஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. 3950

மதுபோதையில் காணப்படும் சாரதிகளுக்கு வேலைநீக்கம்

இ போ ச எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

கடமையில் இருக்கும் போது மது போதையில் காணப்படும் சாரதிகள் உடனடியாக வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். இலங்கைப் போக்குவரத்துச்சபைச் சாரதிகளுக்கு; சபை மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது

இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதிகள் கடமையிலிருக்கும் பொழுது மதுபானம் அருந்திய நிலையில் காணப்படுவதாகவும், இதனால் பஸ்ஸில் பிரயாணம் செய்ய அஞ்சுவதாகவும் பிரயாணிகள் பல புகார்கள் செய்திருந்தனர். இது தவிர பிரயாணிகள் சிலரும் மதுபோதையில் பஸ்ஸை செலுத்தும் சாரதிகளால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் புகார்கள் செய்திருந்தன

மதுபோதையில் சாரதிகள் காணப்பட்டால் பிரயாணிகள் உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப்புகார்செய்யவேண்டுமென்றும் இ போ ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

அப்புகார் நிரூபிக்கப்பட்டால் அச்சாரதி மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும்அவர்தெரிவித்தார்.(நா)

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m
Sat Sundays 10-30
Anne Bancrofe
Dustin Hoffmen
in
THE GRADUATE
(color film)
(Children accompanie i with adults allowed)

திரைசீலை 2-00, இரவு 10-00
நாகேஸ்வரர் வ- அஞ்சலி நடித்த
கலைவாணன்

நாகம்ஸ் சினிமா
கல்லூரி
திரைசீலை 4-30 மகிடும்
சனி, ஞாயிறு 10-30
HONDO AND
THE APACHES
(கலர் ஸ்கோப் படம்)

திரைசீலை 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
பட்டணத்தில்
பூதம்

ராஜா எம். ஜி. ஆர். இரு வேடங்களில்
(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா-அசோகன்
திரைசீலை 4 காட்சிகள் நடித்த
நீரும் நெருப்பும்

ராணி
(யாழ்ப்பாணம்)
திரைசீலை 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி

வெலிங்டன் - லிடோ
(யாழ்ப்பாணம்)
திரைசீலை 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு, 10-30.
திரைசீலை காலை 10-00, மணிக்கு மகிடும்



★ சிவாஜி ★ பத்மினி
★ நாகேஷ் ★ தங்கவேலு
நடித்த
வியட்நாம் வீடு

லிடோ
(யாழ்ப்பாணம்)
திரைசீலை 2-006-00, 9-30.
சிவாஜி பத்மினி
நடித்த
தில்லானாமோகனாம்பாள்

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டு வேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3846

விற்பனைக்கு
பரந்த வரிமன ஆமணக்கெண்ணை கூந்தலை நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரச்செய்யும். கண்களுக்குப் பிரகாசத்தையும், மூளைக்குக் குளிர்ச்சியையும் கொடுக்கும். எஸ். கப்பிரமணியரு கொம்பனி, 53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3845

பவானி சினிமா
மூளாய்
திரைசீலை 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி. ஆர் -ஜெயலலிதா
நடித்த
சந்திரோதயம்

சாந்தி
(சங்கானை)
திரைசீலை 6-15, 9-30
ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்- லதாதேவி
நடித்த
என் கடமை

நியூ கமலிங்கன்
இணுவில்
திரைசீலை 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
சிவாஜி பத்மினி
நடித்த
புனர் ஜென்மம்

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை)
திரைசீலை 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வேல்லி சினிமா
(மானிப்பாய்)
திரைசீலை 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
AVM. ராஜன் - ஜெமினி
நடித்த
சக்கரம்

MANOHARA
(Jaffna)
Daily 4 Shows
THE BLIND
SWORDS WOMAN
(Co'or - Scope)

தேவை
யாழ்ப்பாணத்திலே வாற்பங்கினைக்கு ஏற்ற நூறு வரப்பு நிலம் தேவை. நல்ல தண்ணீர் போக்குவரத்து வசதி இருக்கவேண்டும். வாணி இன்வெஸ்ட்மெண்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3936

விற்பனைக்கு
6 சிறி பேஜோ 403 வாகனம் ஓடுவதில் சொந்தப் பாவிப்பிலுள்ளது. 52,541 மைல் கேகேசெய்தது. நல்ல பார்வையிலிருப்பது. 28 முதல் 30-ந் திகதி வரை யாழ்ப்பாணம் ஆஸ்பிடி அம்பலவாணர் வீதி 116-ம் இலக்கத்திற் பார்வையிடலாம். பணமும் வாடகையும் மாற்றுவதுமாற்றியும் ஆலோசிக்கப்படும். 3942

சாவகச்சேரி நகர எல்லைக்குள் வீடு கட்டுவதற்கேற்ற 2 பரப்புக் காணி (இணற்றுடன்) உடனே விற்பனைக்குண்டு. க. கணேசலிங்கம், 40, கொண்டாவில் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். 3947

வைத்தியம்
ஆலோசனை இலவசம். மலக்கிடுதல் அரைச் சவர் Rs 150/-. சிங்கப்பூர் மலக்கிடுமிடம், A. S. சுகரப் பிக்கிங் கிடிடம், 88 மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

வாதம், கிரந்தி தொய்வு ஆகிய விபரீதங்களை முற்றாக குணப்படுத்துவதில் நிறைமை பெற்ற டாக்டர் எஸ். கந்திபுரம் (D A M) தக்பாக்கரின் வைத்திய சாலை, இராசா வீதி நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3898

கல்வி
ஆரம்ப வகுப்புகள், ஜி. சி. ஈ., ஆராய்ச்சி வழிகாட்டிகளான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் பிரிவுகள் நடாத்தப்படும். வெற்றியே போதனை நிலையம் (தபால் மூலம் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3888

சோதிடம்
நிறம், வயது, பூவின் பெயர், குறித்து, 15 சதமுத்திரையுடன் உறையனுப்பிப் பதில் பெறவும். இலவச சேவை; மருந்தாத்துவ ஆருடம், ஞானபண்டித வைத்தியசாலை, அதிபர் ந. சண்முகராஜா, கொக்குவில். 3900

நாய்கள் தொல்லை
நல்லூர்க்கொல்லை, வெள்ளி நல்லூர்க்கொல்லை நகர வீதிகளில் நாய்கள் தொல்லை அதிகரித்து வருகின்றது. இந்த நாய்கள் நள்ளிரவில் புலவிரவும் பிரயாணிகளுக்கும் அதிகாலையில் பல் பிரயாணிகளுக்கும் தொல்லை கொடுத்து வருகின்றன.

தேவை
பொதுமுகாமையாளர் பதவி - பச்சிலைப்பள்ளி ம. நே. க. சங்கம், பளை.
சம்பளம் - 350/-எல்லாம் உடபட.
வயது 25 தொடக்கம் 40 வரை 15 2-1972 அன்று.
பிணை ரூபா 2000/-பணம்: ,, 5000/- தனியார் தகைமைகள் ஆக்குறைந்தது: கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது 5 வருட அனுபவமுள்ள கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது சி. த. ப. அல்லது க. பொ. த. (சா. த.) ஆகிய ஒரு வாடமாகச் சித்தி பெற்றிருப்பதுடன் கூட்டுறவுப்பயிற்சி (சா. த.) பெற்றவரும், கூட்டுறவுச் சங்கங்களில் முகாமையாளராகக் கடமையாற்றி 8 வருட அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்கள் வரவும் தலைவர், பச்சிலைப்பள்ளி ம. நே. க. சங்கம், பளை, என்ற விலாசத்திற்கு மகிடும் 15-2-72-ம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.
தலைவர்
பச்சிலைப்பள்ளி
ம. நே. க. சங்கம், பளை. 3940

கல்வி
மோட்டார் எந்திரவியல் அறிந்தவர்கள் கவனிக்கவும். தொழில் நுட்ப வல்லுனர்களுக்கு. விஞ்ஞான ரீதியில் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. (1) ஒட்டோ மைல் எஞ்ஜின். (2) காபரேஷன் பியூல், இஞ்செக்ஷன் ஆன் எலக்ட்ரிக்கல் இக்குப்மெண்ட், (3) ரூல்ஸ் மிஷன் ஆன் சனிக், [4] மெஷின் கிரேயிங், [5] மழுதுபார்த்தலும் பேணுதலும், [6] பிரக்டிகல்: காலம் 1 வருடம் முழுநேரம் ஆரம்பம் 31-1-72 விபரங்களுக்கு ஸ்ரீராஜ். ஒட்டோமோபைல் எஞ்ஜினியரிங் இன்ஸ்டிடியூட் 11B & 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3935

காந்தியடிகள் விழா

யாழ்ப்பாணம், சனி மானிப்பாய் மறுமலர்ச்சி கழகம் நான்கு மாதங்கள் காந்தியடிகள் ஆராராகிய புனித தினத்தைச் சிறப்பாக கொண்டாடவிருக்கின்றது. அன்று பக்திப்பாடல்களும், சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

கோரிக்கை

கல்லியங்காடு, வெள்ளி நல்லூர் வை. சி. சி. தமிழ்ப் பெண்கள் பாடசாலையிலிருந்து திருநெல்வேலி இந்து தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றஞ்செய்யப் பட்டுள்ள தலைமையாசிரியர் திரு. அ. செல்வத்துரையை மீண்டும் வை. சி. சி. பெண்கள் பாடசாலைக்கு நியமித்துத்தரும்படி பெற்றோர்-ஆசிரியர் சங்கம் வடமாகாண கல்விப்பணிப்பாளரைக் கேட்டுக்கொள்கிறது.

யாழ். லின்ஸர் வெண்திரையில்

நாளை 30-1-72 குதூகல ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி கணேசன் ★ ஜெயலலிதா
தங்கவேலு, தேங்காய் சீனிவாசன், நாகேஷ்,
மூர்த்தி, குமாரி சச்சு, வி. கோபாலகிருஷ்ணன்
நடித்த
சிவாஜி கணேசன் அளிக்கும்

சுமதி என் சுந்தரி

(முழு நீள வண்ணக் கலர்) டைரக்ஷன்: ஸ்ரீ. வீ. ராஜேந்திரன்

வைத்தியர்களுக்கு
ஆயுர்வேத மருந்துக்கூட்டு சபை
(CEYLON AYURVEDIC DRUG CORPORATION)
குங்குமப்பூ, கோரோசனை, லிங்கம்
முதலிய சரக்குகளும்
நாவின்னா
ஆயுர்வேத ஔடதசாலை
(AYURVEDA DRUG FACTORY)
தயாரிப்பு மருந்துகளும் அறிமுக அடிப்படை பேரில் கட்டுப்பாட்டு விலையில் யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

போய தினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சிகள் இல்லை

இந்தியாவின் உண்மை நிலையை

அங்கீகரிக்கும் சமயம் அமெரிக்காவுக்கு வந்துவிட்டது!

வாஷிங்டனில் பாரதத் தூதர்

புதுதில்லி, ஜன. 28

இந்திய தூதர் வாஷிங்டனிலிருந்து திரும்பி உண்மை நிலையை அங்கீகரிப்பதற்குத் தக்க சமயம் அமெரிக்காவுக்கு இப்போது வந்துவிட்டதென்று வாஷிங்டனில் நேற்று பாரதத் தூதர் எல். கே. ஜா. கூறினார்.

தேசிய பத்திரிகையாளர் கிளப்பில் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அமெரிக்காவின் 7-வது கடற்படை அணி அனுப்பப்பட்டது பாரதத்துக்கு மிகுந்த எல்லை அளிப்பதாகவும், மக்களிடையே ஒரு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்ததென்றும் அவர் கூறினார்.

இந்துமகா சமுத்திரத்தில் இது அமைதியைப் புறக்கணித்த, பதற்றநிலையைத் தோற்றுவித்ததென்றும் சொன்னார்.

ரஷ்யாவுடன் பாரதம் செய்துகொண்ட ஒப்பந்தம் தமது மண்டலசார்பற்ற கொள்கையையோ அன்றி ஏனைய வல்லரசுகளுடனான உறவையோ விலக்கிக் கொள்வதாக இருக்கவில்லையென்று திரு. வா குறிப்பிட்டார்.

சீனா அமெரிக்காவுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளத்தக்க ரஷ்ய ஒப்பந்தம் குறுக்கீடாக என்றுமே இருக்கமாட்டாதென்று கூறிய அவர், சீனா அமெரிக்காவுடன் உறவைப் பலப்படுத்திக் கொள்ளவே இப்போதும் பாரதம் விரும்புவதாகச் சொன்னார்.

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. ரோஜர்ஸ் இந்தப் பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசினார்.

அமெரிக்காவில் தென்கிழக்காசியா சம்பந்தமான கொள்கைகளை மறுபரிசீலனை செய்யவிருப்பதாக கூறினார்.

பாரதமகைகளை விலக்குவதில்

பாகிஸ்தானுக்கு எவ்வித சம்பந்தமில்லை!

— ஜகஜீவன்ராம்

லக்னோ ஜன 28

பங்களாதேஷிலிருந்து பாரதப்படைகளை விலக்கிக் கொள்வது சம்பந்தமாக பாகிஸ்தானுக்கு எவ்வித சம்பந்தமுமில்லையென்று நேற்று பாரத பாதுகாப்பு மந்திரி திரு. ஜகஜீவன்ராம் லக்னோவில் கூறினார். இங்கு நடந்த நிருபர்கள் சந்திப்பொன்றில் அவர் பேசினார்.

பாரதப்படைகள் பங்களாதேஷிலிருந்து விலக்கிக் கொள்வது இருநாடுகளுக்குமிடையிலுள்ள பிரச்னையென்றும், பாகிஸ்தான் இந்தப் பிரச்னையில் தலையிட வேண்டிய அவசியமில்லையென்றும் அவர் உறுதியாகக் கூறினார்.

பாரதம் எல்லாநாடுகளுடனும் நட்புறவையே விரும்புகிறதென்றும், தேவையற்ற பிரச்னைகளில் அது தலையிட விரும்பவில்லையென்றும் தனது நாட்டின் நிலையை வற்புறுத்திச் சொன்னார்.

இந்தியாவில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டுமென்பதையே விரும்புகிறதே நேரத்தில் பாரதத்தின் கௌரவத்துக்கு சவால் விடப்படும் எந்தக் காரியத்தையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் கூறினார்.

'இந்தியா - சோவியத் நட்புறவு சமாதானத்தை உறுதிப்படுத்தும்!'

தமிழக முதல்வர் கருணாநிதி கருத்து

சென்னை, ஜன 28

"இந்திய-சோவியத் நட்புறவும் ஒத்துழைப்பும் இந்தியத் துணைக்கண்ட நாடுகளில் சமாதானத்தை உறுதிப்படுத்தும் என்பது திண்ணம். நாம் விரைவாக முன்னேறவும் இவ்வுலகிலுள்ள பிற மக்களுக்குச் சமமாக நம்மக்களுக்கு வளமான உத்தரவாதம் செய்யவும் சமாதானம் நமக்கு மிகத் தேவையாகும்"

இவ்வாறு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி 'டாஸ்' நிருபருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

இந்தியத் துணைக்கண்ட நிலைமைகள் சம்பந்தமாகச் சோவியத் யூனியன் மேற்கொண்ட நிலைகுறித்து எடுத்துக் கூறுகையிலேயே இப்படிச் சொன்னார்.

ஆக்கிரமிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பணியில் இந்தியா ஈடுபட்டிருந்த போது சோவியத் யூனியன் தன்னுடைய நட்புரிமையை சந்தடியின்றிச் செயலாற்றி இந்தியாவுக்கு உதவியது. இந்தியாவின் ஒருமைப்பாடுமே தன்னம்பிக்கையோ எந்தவிதத்திலும் பாதிக்கப்படாத வகையில் அன்று சோவியத் யூனியன் பாத்திரம் அமைந்திருந்தது" என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

"இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள நட்புறவு ஆழமடைவதாக இருந்தால் அதன்மூலம் சர்வதேச அரங்கில் ஒரு நாட்டின் சுதந்திரம் ஒருபோதும் கேடுபடுத்தப்படுவதில்லை. இந்தியாவின் வளர்ச்சியையும் கட்டுப்பாடுகளுமே சர்வதேச அரங்கில் சுதந்திரமாக இந்தியா செயலாற்றுவதற்குத் தடையாக உள்ளன என்ற உறுதியான கருத்து நெடுங்காலமாக எனக்கு உண்டு. மதச் சார்பற்ற நாடாக நம்மை உருவாக்கும் முயற்சியில் நாம் ஒடுக்கப்பட்டு வந்தோம். இது சீன மக்களைத் தந்தையாக இனிமேல் சர்வதேச அரங்கத்தில் முழுச் சுதந்திரத்துடன் நாம் வலம்வர முடியும்" என்றார் அவர்.

காஷ்மீர் நீரை புகுறற நவீன பிளாஸ்டிக் அணை

லண்டன், ஜன 28

ஜெனிஸ் நகரவாசிகள் தமது நகரத்தில் ஓடும் காலவாய்களில் ஒன்றைச் சுத்தப்படுத்த வேண்டுமானால் அவர்கள் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட புதிய பிளாஸ்டிக் அணையைப் பயன்படுத்தலாம்.

அந்த அணை செயற்கை நூலிழையால் ஆன ஒரு குழாய் ஆகும். காலவாயின் அகல அளவான குழாயை எடுத்துக் காலவாய்க்குக் குறுக்கே பொருத்திவிட்டு குழாய்க்குள் காலவாயின் நீரைப் பாய்ச்ச வேண்டும். குழாய் நிரம்பிப் பெருத்த காலவாயை அடைக்கும். இதேபோன்ற இன்னொரு குழாயை சற்றுத் தள்ளிப் பொருத்தி நீரால் நிரப்ப வேண்டும். அது காலவாயின் மற்றொரு புறத்தை அடைக்கும்.

30 ஆயிரம் வெள்ளி ரயிலில் கொள்ளை

லண்டன், ஜன 28

30 ஆயிரம் சுவிட்சர்லாந்து வெள்ளி நாணயங்களும் நாணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. ரயிலில் இந்தத் துணிகரக் கொள்ளை நடந்தது!

லண்டனிலிருந்து சுவிட்சர்லாந்து இந்தப் புதிய பணம் ரயிலில் அனுப்பப்பட்டது. அப்போது இந்துணிகரக் கொள்ளை நடந்ததாக அறிவிக்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்து நாட்டுக்காக இப்புதிய பணம் லண்டனிலிருந்து ஹாரிக்கட்டிலிருந்து ரயில் மூலம் அனுப்பப்பட்டபோதே இச்சம்பவம் இடம் பெற்றது.

பங்களாதேஷை சைப்பிரஸ் அங்கீகரிக்கும்

லண்டன், ஜன 28

பங்களாதேஷ் அரசை சைப்பிரஸும் அங்கீகரித்தே தீர்மானித்துள்ளது. சைப்பிரஸ் அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் இந்தவகை வெளியிட்டார்.

ஹகைகேயுடனான உறவை பாகிஸ்தான் முறித்துக் கொண்டுவிட்டதாக இன்னொரு பாரதத்திலிருந்து நேற்றிரவு வெளியான உத்தியோகபூர்வமான அறிவிப்பு ஒன்று தெரிவித்தது. பல்கேரியா போன்ற யூகோஸ்லாவியா போன்ற நாடுகளு

[7-ம் பக்கம் பார்க்க]

உங்கள் நெல் விளைச்சல் பெருக
—பாவியுங்கள்

ஹிரோசான்

புதிய எரிவந்த நோய் நாசினி



நெத்தகக் கரியச் சேர்மானம் கொண்ட ஹிரோசான் என்னும் புதிய காளான் நாசினி, நெற்பயிர் நோய்களில் மிகக் கொடியதான எரிவந்த நோயைத் தீர்ப்பதில் விசேஷ வன்மை வாய்ந்தது.

ஹிரோசான் இரட்டைச் செயல் வன்மை வாய்ந்த காளான் நாசினி. அது—

1. எரிவந்த நோய் தாக்க முன்பு தெளித்தால் பயிர் நோய்ப்படாமல் காக்கிறது.

2. பின்பு தெளித்தால் நோயைத் தீர்க்கிறது.

மேலும் பயன் தருவது ஹிரோசான். கபிலப்புள்ளி நோய், மடற்கொப்புள நோய் முதலாம் நோய்களும், தத்துக்கிளி முதலாம் பூச்சிகளும் பயிரைப் பாதிப்பதைத் தடுக்கவும் அது உதவுகிறது — ஏக காலத்தில்!

பயிர்களுக்குப் பன்முகப் பாதுகாப்பளித்து நெல் விளைச்சலைப் பெருக்கப் பாவியுங்கள் — ஹிரோசான். ஒரு பிரத்தியேக பேயர் தயாரிப்பு.

உற்பத்தியாளர்:
பேயர்
ஜெர்மனி.

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P0472

இரு அலை வரிசை கொண்ட ரேடியோ

ரூ. 325/=

SONY®

8R-24 MS



சோனி

சிற்றலை, மத்திய அலை ஆகிய வற்றுடன் மிக நேர்த்தியான ஒலி அமைப்பிற்கு, உள் அமைக்கப்பட்ட ஒலிக் கம்பம் உடையது. நான்கு டோர்ச் பாட்டரிகளில் இயங்குவது.

சிடில்ஸ் சினேரேடியோ
9-10, கன்சிஸ்டர் கட்டிடம், பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
இளைகள் — கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, பம்பலப்பிட்டி.

மணிவாக்கு

முடன் தன்னை அறிவாளி என்று எண்ணிக் கொள்கிறான். அறிவாளியோ தன்னை முட்டாள் என்று எண்ணிக் கொள்கிறான். — ஷேக்ஸ்பியர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "ELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] வியாழக்கிழமை தை மாதம் 15-ந் திகதி (29-1-72)

வியட்நாம் பிரச்னை

வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணவும் அமைதி ஏற்படவும் அமெரிக்க அதிபர் திரு. நிக்சன் சில தினங்களுக்கு முன்னர் புதிய திட்டம் ஒன்றை அறிவித்தார். வியட்நாமிலிருந்து கருப்புக்களைத் திருப்பி அழைத்துக்கொள்வது, போர்க் கைதிகளைப் பரிமாறிக் கொள்வது, தென் வியட்நாமில் புதிதாக அதிபர் தேர்தல் நடத்துவது ஆகியவைகள் அவர் தெரிவித்த அமைதித் திட்டத்தில் முக்கியமான சில அம்சங்களாகும். அதிபர் நிக்சனின் புதிய திட்டத்தை வட வியட்நாமியர் எண்ணித்திருக்கின்றனர். ஆனால் அதை அவர்கள் நிராகரிக்கவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நிக்சனின் புதிய திட்டத்தையும் வட வியட்நாமிய குடன் நிக்சனின் வெள்ளை மாளிகை ஆலோசகர் டாக்டர் கிஸிஞ்சர் நடத்திய அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளை அவர்களின் சம்மதத்தைப் பெறுமலே வெளியிட்டதையும் வாரிஸில் நடைபெறும் வியட்நாம் அமைதிப் பேச்சில் கலந்து கொள்ளும் வட வியட்நாம்பிரதிநிதிகளும் வியட்கொங் பிரதிநிதிகளும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர். [illegible] வியட்நாம் பிரச்னை [illegible] இப்பகுதிக்கு மட்டுமல்ல இன்னும் சில காலம் கழிந்தும்கூட விடிவு கிடைக்குமா என்பது கேள்விக் குறியாகவே தென்படுகிறது.

வியட்நாமில் போரை நிறுத்தவேண்டும் என்பதும் தம் தருப்புக்களை வாபஸ் பெறுவது என்பதும் புதிய யோசனையல்ல. புனித்துப் போன இந்த யோசனைகள் வெறும் யோசனைகளாகவே இருந்துவருகின்றனவேயன்றிச் செயல்படுவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை.

ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள வியட்நாமுக்குச் சென்று வியட்நாம் மக்களை அழிக்கிறதுமட்டுமல்லாது தமது நாட்டு மக்கள் பலரையும் பலி கொடுத்து உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் வெறுப்பைத் தேடிக் கொண்ட அமெரிக்க நிர்வாகம் ஜோன்ஸனிடம் இருந்து நிக்ஸனிடம் மாறியபோது எப்படியோ வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை சிறிதளவு தென்படுகிறது. ஆனால் சில வாரங்களுக்கு முன் அங்கு மீண்டும் கடுமையான குண்டு வீச்சில் அமெரிக்கர் இறங்கிய போது இந்த நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டது.

சீனாவின் கம்யூனிஸ ஆதிக்கம் வரவாகக் கருதி நாட்கொள்ளவே அமெரிக்கர் ஜனநாயகத்தின் ஆபத்பாந்தவர்களாகச் சென்றனர். ஆழம் தெரியாமல் காலை விட்டு இன்று அவதிப்படுகின்றனர்.

சீனாவுக்கு நடுக்கரம் நீட்டியுள்ள இச்சமயத்தில், ஜனநாயகம் பற்றிப் புதிய கொள்கைகளைக் கொண்டுள்ள இந்நேரத்தில் வியட்நாமை விட்டு வெளியேறுவதில் சங்கடம் ஒன்றுமில்லை. ஆனால் அமெரிக்காவின் மதிப்பும் குறைந்துவிடாது வியட்நாம் மக்களே தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்ள அற்குவிடுத்து அமெரிக்கர் அங்கிருந்து முற்றாகவெளியேறுவதுதான் வடவியட்நாம் தென் வியட்நாம் வியட்கொங்கியர் என்ற விடுதலைப்படையினரும் சேர்ந்து பேசித் தங்கள் எதிர்காலத்தை நாங்களே தீர்மானித்துக் கொள்ளத்தான் வியட்நாம் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகிடைப்பதற்குள்ள சிறந்த வழியாகும்.

வகுப்பேற்றம்

பிள்ளைகள் படித்தாலும் படிக்காவிட்டாலும் பரீட்சையில் நல்லபுள்ளிகளைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் அவர்களை வகுப்பேற்றிவிடும் முறை கடந்த சிலவருடங்களாக நமது நாட்டில் பின்பற்றப்பட்டு வந்தது. "எல்லாப் பிள்ளையும் பாஸ்" என்று பெற்றோர் பெருமைப்பட்டுக் கொள்வதைத் தவிர பிள்ளைக்கோ, பெற்றோருக்கோ, நாட்டுக்கோ, 'தானாக வகுப்பேறும்' திட்டம் பயன்தரவில்லை. நன்மையைவிட இது தீமையையே அதிகம் செய்துள்ளது. இத்திட்டத்தைக் கைவிட்டு பிள்ளைகள் பெறும் புள்ளிகளைக் கணித்து திறமையின் அடிப்படையிலேயே இனி வகுப்பேற்றம் நடைபெறுமென்று கல்வி அமைச்சர் அறிவித்திருப்பது வரவேற்கவேண்டிய நல்ல விஷயம்.

இதே சமயம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனித்தனியான பதிவேடுகளைப் புத்தகம் வைக்கப்படுமென்றும் மாணவர்கள் வருட முடிவில் சித்திபெறத் தவறினால் அதற்கு ஆசிரியர்களே விளக்கம் தெரிவிக்க வேண்டுமென்றும் கல்வி அமைச்சரின் புதிய உத்தரவு தெரிவிக்கிறது.

பிள்ளைகள் நன்றாகப் படிக்காவிட்டால் ஆசிரியர்கள் மட்டும்தான் அதற்குக் காரணமா? வீட்டில் வசதிக்குறைவு, புத்தகத்தட்டுப்பாடு; கொள்பிடித் தட்டுப்பாடு இப்படிப் பல காரணங்கள் உள்ளன.

மேல்வகுப்பில் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் விஷயத்தில் தரப்படுத்தல் என்றவொரு பிரச்னை.

இதேசமயம் பரீட்சை வினாத்தாள்கள் பள்ளிகளும்ரயில்களிலும்திருடு கிறார்களென்றும் வீட்டில் மனைவி, மக்கள், மாணவர்கள் என்று அக்கறையில்லாமல் அலட்சியத்துடன் நடந்து கொள்கிறார் என்றால் பரீட்சைக் கமிஷனரே தெரிவித்து இதுபற்றி விசாரணையும் நடத்தி வருகிறாராம்.

நன்றாகப்படித்து நன்றாகப் பரீட்சை எழுதிய மாணவர்களின் விஞ்ஞாபனங்கள் இந்தலட்சணத்தில் திருத்திப்புள்ளிகள் போட்டால் அந்தப்பிள்ளைகள் எப்படி நல்லபுள்ளிகள் பெறமுடியும்? இதற்கும் ஆசிரியர்கள்பொறுப்பேற்கமுடியுமா? அவர்கள் இதற்கு என்னவிளக்கம் கொடுக்கமுடியும்?

பெப்ரவரி 13-ம் திகதியே சிவராத்திரிக்கு உகந்த தினம்

— சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை —

மகா சிவராத்திரியை மாசி மகத்தோடு நோக்கத் தோடும், ஈழத்திலே வாழும் சைவப் பெருமக்கள் மத்தியிலும் பெரும் குழப்பத்தை உண்டுபண்ணும் வினாவோடும் சிவராத்திரி பற்றிய சிந்தனைகள் குளப்பப்படுகட்சிகிடி போராடும் கேள்விக்கிடமான நிலை நம்மிடையே உண்டாகியிருப்பது ஒரு வேதனைக்குரிய விடயமாகும்.

பழங்காலம் தொட்டே பரம்பரைபரம்பரையாக மாசித்திங்களில் கொண்டாடி வரும் சிவராத்திரி விழாவை இம்முறை சிக்கல் புகுத்தப்பட்ட காரணம் எதுவாய் இருப்பினும் சரி சைவப் பக்தர்கள் முறையான தேதியை தேர்ந்தெடுக்க வேண்டியது அவசியம்.

மாசி மாத அமாவாசை சதுர்த்தசி மாசி மாத 1-ம் திகதி (13-2-72) ஞாயிறு ஐந்து நாடி இரண்டு விநாடி முதல் மறுநாள் 2-ந் திகதி திங்கள் மூன்றுநாடி பதினாறு விநாடி வரை நிற்கிறது இந்த தினமே விழாவுக்குரிய தினமென்று சோதிடத்தை வராகமிஹிரரின் குறிப்பில் இருந்து மேற்கோள் காட்டி எடுத்துக் காட்டமுடியும். நாவலர் பெருமான் கூட சிவராத்திரி பற்றி குறிப்பிட்டிருக்கிறார் அதுமட்டுமல்ல சாந்திர மாதங்கள் சௌரமாதங்களைப் பிடிக்கும் புராண இதிகாசங்களில் கூட இதுவே கணிக்கப்பட்டிருக்கின்றது மாக மாசத்தில் சிவராத்திரி கொண்டாட வேண்டுமென்பது ஈழத்தில் மட்டும் முடிவான [illegible] அல்ல.

சோதிடத்தின் பிறப்பிடமாகிய தமிழ்நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் தீர்மானிக்கப்பட்டு உள்ள விடயமாகும். இவ்விழா இன்னும் ஒரு விதத்தில் இருந்து தெளிவாக்கப்பட்டுள்ளதையும் நாம் இங்கு வைத்தில் கொள்ள வேண்டும். சிவனுக்குரியது சதுர்த்தசி பங்குனி மாதத்திலே வர முடியாத சதுர்த்தசி மாசி மாதத்தில் வருவதால் மாசி 1-ந் திகதியே அனுட்டானத்துக்கு உகந்தமான நாளாகும். காரணமும் காமிக ஆகமமும் இதையே வலியுறுத்த ஏற்றவகையாக அமைந்துள்ளன. சூரியன் கும்பராசியில் பிரவேசித்த பின்பே மாசி மாதம் எமக்கு உரியமாதமாகும். ஆகவே மாசி மாதத்தை தவிர்த்த ஏனையமாதங்களில் சிவராத்திரி அனுட்டானத்தை மேற்கொண்டால் அவைகள் நம் நாட்டிற்கு பல தீமைகளை ஏற்படுமாகும் என்பதே என் முடிவு. சரியான நேரத்தில் முறையானபடி நம்பிக்கையுடன் செய்யத் தவறி விட்டால் நமது சைவ விழாக்களின் புனிதத் தன்மையை நாம் வாழ் அடித்தளங்கள் ஆகிவிடுகிறோம். சிவராத்திரியைப் பற்றிய புராணங்களையும் புனித வரலாறுகள் அத்தனையும் மாசி மாத சதுர்த்தசியிலேயே நடந்ததாக கூறப்பட்டுள்ளது எனவே எதிர்வரும் சிவராத்திரி விழாமாசி மாத முதல் திகதியிலேயே என்பது ஐயம்திரிபுற தெளிவாகிய விடயமாகும்.

சைவபரிபாலன சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட சிவராத்திரி நிர்ணய மாநாட்டிற்கு பேரெழுச்சியோர் மாசி மாதத்தையே தக்க ஆதாரங்காட்டி ஆதரித்த பின்பும் அற்குபங்குனி 13-ந் திகதிதான் சிவராத்திரி அனுட்டானமென நடுவர்குழு தீர்மானித்திருப்பதும் வேடிக்கையாக இருக்கிறது. இவர்களது கூற்றுப்படி சூரியன் மீனத்திற்கு செல்லும் போதே சிவராத்திரி அனுட்டானம் நடைபெறுகின்றது. இது என்றுமே நடக்காத காரியமாகும். பாற்கடலை கொல்வது பற்றியும் பல ஐயத்திற்கு இடமான கருத்துக்களையும் இவர்கள் கிளப்பியுள்ளனர். முன்னுக்குப் பின்முரணான பிரச்னைகளை உருவாக்கி சைவமக்களை ஒரு குழப்பத்திற்கு உள்ளாக்கப் பார்ப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இறுதியாக இவ்விடயத்தில் ஒரு தரிசனமுடிவு ஒடுமித்த கருத்துடன்காண்பதே சாலச்சிறந்தது. இதனால் ஈழத்தின் சோதிடக்கலைஞர்களையும் கௌரவிப்பதாகவும் ஆகும். நம்நாட்டிலே வெளிநாடும் தொன்மை வாய்ந்த இரு பஞ்சாங்கங்கள் கூறுவதோடு சைவப்பெருமக்கள் மாசித்திங்களிலே சிவராத்திரிக்குரிய நாளாக கொள்ளவேண்டும். இங்கு வாழும் சைவப்பெருமக்களுக்கு இதனால் ஒரு ஆறுதல் ஏற்படும் என்பது எனது எடுத்தாகும்.

'தமிழர் இனநலக்கொள்கை இயற்கையோடியைந்தது'

பங்கர் நினைவு விழாவில் வண. பிதா தனிநாயகம்

யாழ்ப்பாணம், சனி

தமிழர்களது மனித இன நலக் கொள்கை, வாழ்க்கை முறை இயற்கையிலிருந்தே உற்பத்தியான தென்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. இவை எமது சங்க கால இலக்கியங்கள் மூலம் துலக்குகின்றன.

திராவிடதமிழ் மொழியாரத்தை தெளிவாகக் காட்டும் முதல் நூல் தொல்காப்பியமாகும். இதில் அகம், புறம் என இரண்டாகப் பிரித்து காட்டப்பட்டுள்ளது. இதில் புறம் வெளிமனித இயல்புகளைப்பற்றி எடுத்துக்காட்டுகின்றது. அகம் இல்லறவாழ்வு, அன்பு வாழ்க்கையை துலாம்பரமாகக் காட்டுகின்றது. திருக்குறளும், சிலப்பதிகாரமும் திராவிட இனநலக் கொள்கைகளை எடுத்துக் காட்டும் சங்ககால நூல்களாகும். இதில் திருக்குறள் தத்துவத்தை தெளிவுபடுத்தி காட்டுகின்றது. சிலப்பதிகாரம் வாழ்க்கை நிலை, நகரசூழ்நிலைகள் இயற்கைவர்ணனைகள் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றன. இதன்மூலம் திராவிட இன நலக் கொள்கைகள் மேலும் தெளிவு படுத்தப்படுகின்றன.

இவ்வாறு விவாழக்கிழமை என்று வாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பங்கர் நினைவு தின விழாவில் உரையாற்றிய வண. பிதா தனிநாயகம் அடிகள் கூறினார்

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் லோறிஜ டபிள்யூ. எல். ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கடைச்சங்க இலக்கியங்கள் பலபுலவர்களாலும், நாயன்மார்களாலும் அருளப்பட, பாமூலம் திராவிட இனநலக் கொள்கை தெழிவு படுத்தப்படுகின்றது இது குறுந்தொகையில் இடம் பெறுவதைக் காணலாம். பக்தி இலக்கியங்கள் கடவுள் ரீதியாக திராவிட இனக் கொள்கைகளை எடுத்துக்காட்டுகின்றது. இராமலிங்க அடிகள் இதை எடுத்துக்காட்டியிருக்கிறார். இதன் அடிப்படையிலே தேசிய நலன்களில் பாரதியார் பாரதிதாசன், இரா. பி. சேதுப்பிள்ளை ஆகியவர்கள் நடந்து வந்திருக்கின்றனர். இவை திராவிட தமிழ் நாகரீகமும், தத்துவங்களும் மனித இனநலக் கொள்கைகளில் இயற்கையாக உற்பத்தியானவை என்பதற்குஉதாரணங்களாகும்.

(குரு. திரு)

தோப்பு வா. மு. க. திறப்பு விழா

புத்தூர், சனி

ஆச்சுவேலி தோப்பு வாலிபர் முன்னேற்றக் கழக வாசிகசாலை 14-வது ஆண்டு நிறைவு விழாவும், புதிய கட்டிடத்திறப்பு விழாவும் இன்று மாலை நிகழ முன்றலில் நடைபெறவிருக்கிறது. திரு. பொ. க. சந்தசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வலிகிழக்கு காணிபாதுகாவலர் திரு. வ. சந்தப்பிள்ளை பிரதம விருந்தினராகக்கலந்து புதிய கட்டிடத்தைத் திறந்துவைப்பார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. சி. நடராசா, யாழ் மாவட்ட சமாசமுன்னாள் செயலாளர் திரு. கப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தெல்லிநகர் அம்பனைக் கல்லூரி மன்றத்தினரின் 'நல்லதீர்ப்பு', தோப்பு வாலிப முன்னேற்றக்கழக நாடகக்குழுவினரின் 'இது தானா உலகம்' தெல்லிபுரி இளங்கதிர் மன்றத்தினரின் 'பாசத்திலகம்' ஆகிய நாடகங்கள் விழாவில் இடம் பெறும்.

உப உணவு வழங்காமல் திருப்புகிறார்களாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரிசிதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் உப உணவுப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாகப் பல்த புகார் கூறப்படுகிறது.

கப்பல் அரிசியையும் உப உணவுப் பொருட்களையும் பெறுவதற்காக இங்கு செல்பவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டி ஏற்படுவதாக, இவ்விதம் பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார். சிரமம், மலிவு, மிகவாய், சீனி போன்றவற்றுக்கு 'நாளை வா, நாளை மறுதினம் வா' என்று [illegible] கூறுகிறார்களாம்.

மாத முடிவில் உப உணவுப் பொருட்களை வாங்குவதற்காகச் செல்பவர்களிடம் தினமும் பொருட்கள் வழங்காமல் திருப்புவதாகவும் இப்பகுதிப் பாவனையாளர்கள் புகார் கூறுகின்றனர்.

புதிய அதிபருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

சோப்பாக் கிறிஸ்தவக் கல்லூரிப் புதிய அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு கல்லூரிப் பெற்றோர் ஆசிரிய சங்கம் வரவேற்பளித்தது. இவ்வைபவத்தில் பேசிய மொழித்திணைக்களம் முன்னாள் அதிகாரியான திரு. வ. வி. மயில்வாகனம் புதிய அதிபர் சமயப்பற்றுள்ளவரென்றும் அருளோடு தலைக்கல்லூரி அதிபராகி இருந்தபோது அதன் புகழ் பரவுவதற்கு இவர் காரணராயிருந்ததாகவும்சொன்னார். வழக்கறிஞர் ஏ. [illegible] நாதன், ஆசிரியர் எஸ். சபாரத்தினம் ஆகியோரும் பேசினர்.

அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் இக்கல்லூரியின் செ. ஆ. சங்கக்கட்டிடத்தில் வாசகசாலை இருந்த காலஞ்சென்ற திரு. எம். எஸ். ராஜசிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கல்லூரிக்கு பெயர் மாற்றவேண்டுமென்றும், சமயஆசிரியர்களில் ஆசிரியர்களை மாற்றித் தரவேண்டுமென்றும் இந்த நாகரிகம், விஞ்ஞான வாடகைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் ஆதரவாளர் செ. குணசிங்கத்தினால் முற்றுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

சந்தையில் கட்டாக்காலி மாடுகள்

கல்லுவிளாடு, வெள்ளி

கல்லுவிளாட்டுச் சந்தையில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதாக, இப்பகுதியில் யாழ் மாநாரரசபை ஊழியர்கள் நியமித்துள்ளது. சந்தையில் புகுந்த கட்டாக்காலிகள் காய்கறிகளை மேய்ந்துவிடுகின்றன என்று மேலிடம் புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்பகுதியில் கட்டாக்காலிகள் நடமாடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மருந்துத்தட்டுப்பாடு

எழுதுமட்டுவாள், வெள்ளி

எழுதுமட்டுவாள் சந்தைக்கு இலக்கிவரும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையிலும் பல அரசியல் வைத்தியசாலையிலும் நோயாளர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் இப்பகுதிமக்கள் பெரிதும் வேதனையுறுகின்றனர். இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்குப் போதிய மருந்தை மிருசுவில் பிராதேசசபைத் தலைவர் பெற்றுக் கொடுக்கப் பெரும் முயற்சி எடுத்துவருகிறார்.

உணவு
காமல்
ரோர்களாம்
னம், வெள்ளி
ப நோக்குக்
டையில்
பொடுக்கல்
சம்பந்தமாகப்
கறப்படுகி
கியையும் உப
பொடுக்கனையும்
ரை இரு செல்
ரற்றத்துடன்
ஏற்படுவ
தம் வாதிக்கப்
ர் தெரிவித்
, மல்லி, மின
பொன்றவற்
னை வா, நான
" என்று
சங்க மனேஜர்
.
வில் "உப உண
க்கனை வாங்குவ
செல்வோர்களைத்
ருக்கள் வழங்
பு வருவதற்கு
பாவனையாளர்
றகின்றனர்.

...திபருக்கு ...வேற்பு

...ப்பாணம், சனி
கிறிஸ்தவக்
...திபதி திரு.
...ப் பிரமுகர்
...ரில் பெற்றார்
...ம் பாராட்ட
...ல்லைவளத்தில்
...ழித்திருக்கிறார்
...சேர்வான திரு.
...ர் வாளம்,
...ர் சமயப்பற
...றும் கருணை
... அதிபராகி
...தன் புதி
... இவர் வாரண
...யும்தொன்னூர்
... ஏ. பிரவ
...சிபர் எம்.
...ரும்
...டத்த பொதுக்
...க்கள் ஆர்வத்
...ங்கள் செல்வர்களைத்
...ருக்கள் வழங்
...பு வருவதற்கு
...பாவனையாளர்
...றகின்றனர்.

...தையில் ...க்காலி ...டுகள்

...காடு, வெள்ளி
...ப்பட்ட சந்தை
...டும் கவிடாக்
...னைப் பிடிப்பதற்
...தியில் பாரம்.
... ஊழியர்களை
...து. சந்தையில்
...ப்டாக்காலிகளை
... மேய்ந்துவிடு
...று மேயரிடம்
...கிக் கப்பட்ட
...டர்ந்து. இப்
...ப்டாக்காலிகளை
...ற்கு முற்றுப்
...கப்பட்டுள்ளது.

...தட்டுப்பாடு

...டுவாக். வெள்ளி
...டுவாக் சந்
... இயக்கியவும்
...வேத வைத்
...ும் பள் அரசி
...தியசாலையிலும்
...குத் தட்டுப்
...டுள்ளமை
...திமக்கள் பெரி
...யுறுகின்றனர்.
...வேத வைத்
...குப் போதிய
...நகரில் கிராம
...லைர் பெற்றுக்
...பெரும் முயற்சி
...ரூர்.

சகல பாடசாலைகளிலும் ஜூலை முதல் பெ. ஆ. சங்கம்!

சோக்கட், வெள்ளி

ஜூலை மாதத்திலிருந்து சகல பாடசாலைகளிலும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் அமைக்கப்படவேண்டும் என்கிறபடி இதுசம்பந்தமாக நியமித்த கமிட்டியின் சிபார்சை ஆடுத்து இந்த முடிவைக் கல்வி அமைச்சு எடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா ஜாதிகளுடு சங்கமத் தலைவர் திரு. டி. பிற்றர்சில்வா தலைமையில் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட இக்கமிட்டி வட்டாரம் மாவிட்டம், பெரும்பாலும், தகில இலங்கை ரீதியில் பெற்றோர் - ஆசிரியர் சங்கச் சமாசம் அமைக்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ளது.

பாடசாலைகளில் ஆசிரமாக ஏற்படுகின்ற தளபாடத் தட்டுப்பாடு, பழுது பார்த்தல், சாப்பாடு போன்றவற்றிலும், புதிய கல்வித் திட்டத்தை ஊக்குவிப்பதிலும் பாடசாலையின் வளர்ச்சியில் பொது மக்களைப் பங்கு கொள்ளச் செய்வதிலும் பெற்றோர் - ஆசிரியர் சங்கம் பங்கு கொள்ளச் செய்யவேண்டும் என்ற ஒத்தக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

"கூட்டுறவாளர்களை உருவாக்கியவர்"

மாவிட்டபுரம், வெள்ளி

"இக்கலாசாலையில் பல வருடங்களாகக் கடமை யாற்றி எத்தனையோ கூட்டுறவாளர்களை உருவாக்கியவர். இவர் கூட்டுறவுத் துறை வளர்ச்சிக்கு இன்று சேவையாற்றியது போலத் தொடர்ந்தும் சேவை புரிய வேண்டும்."

இவ்வாறு யாழ். கூட்டுறவு கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி இடமாற்றம்பெற்ற திரு. இ. மு. நாகலிங்கத்துக்கு கலாசாலைப் பழைய மாணவர் சங்கத்தால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசுகையில் வடமகாணி ஐ. பெ. மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் கூறினார்.

மேற்படி சங்கத்தின் உபதலைவரான திரு. பூ. சிங்காரம் தலைமையில் இவ்விழா நடந்தது.

இவ்விழாவில் கலாசாலை அதிபர் க. பரமோதயம், மு. இளங்கோ, த. கணேசு, வ. ஆறுமுகசாமி உட்படப் பலர் பேசினார்கள்.

விவசாய வழிகாட்டி

சோக்கட், வெள்ளி

நெற் செய்கையாளர்கள், மற்றும் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் ஆகியோருக்கு நன்மையளிக்கத்தக்க வகையில் விவசாய வழிகாட்டி நூல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த நூலை அரசாங்க உரக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

பயிரைப் பாதுகாத்தல், பயிரிடும் முறைகள், நவீன யந்திர சாதனங்களைப் பயன்படுத்துதல்போன்ற இன்னோரன்ன பல விவசாயத்துக்குத் தேவையான முக்கிய தகவல்களை மேற்படி வழிகாட்டி நூல் திரட்டி வெளியிட்டுள்ளது. நாட்டின் பல்வேறு விவசாய ஆராய்ச்சி நிலையங்களைப்பற்றியும் இந்த விவசாய வழிகாட்டி நூலில் உள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

29-1-72 சனி

(செய்திகள்: காலை 6-30, மதி 13-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 50 மீ

காலை 6-15 நாதாஞ்சலி-மங்களவாத்தியம் 6-30 வாலாஜாபாத் சிந்தனை - ஆ. வெங்கடரமணன், 6-35 நற்சிந்தனை சங். சகோதரி தேவமலர், 6-50 பண்ணைச் செய்திகள், 7-05 துதிப் பாடல், 7-30 குரல்வளை, 8-00 பொதுப் பிரசங்கம், சங். தர்மதரிசினி. 8-15 இஸ்லாமியகீதம், 8-30 பாட்டு. விஜயலக்ஷ்மி சண்முகம்பிள்ளை, 9-15 வானொலி நாடகம் - ந. சிவசண்முகமூர்த்தி, 9-30 நாதஸ்வரம்-ஏ. பாலகிருஷ்ணன், 10-30 இசைநிகழ்ச்சி ஏ. கே. கருணாகரன், ஏ. நிலகேஸ்வரன். 11-00 வயலின் - வி. கே. குமாரசாமி, 11-30 வரதிருக்கோஷ்டி - நிலையகித் வாலை, 11-45 சரவணபவானந்தர் பாடல்கள் - த. சண்முகரத்தினம்.

பண்ணில் பழுத்த பரம்

சமீபத்து இசையுலகில் 'சிறந்த பாடகர்' என்று கைவிட்டு எண்ணக்கூடியவர்களில் ஒருவர் பரம் திக்கிர சா ஆவார்கள். எம். ஏ. இசைப்பண்பு நிறைந்த ஒரு ஒரு பத்திரிகை உதித்த இவர் மிச்சிறிய வயதிலேயே கச்சேரிப்பக்குவம் பெற்று, சமீபத்திலும் இந்தியாவிலும் தமது இசைத்திறனை நிலைநாட்டி, இன்று பாமரனை தொர் இசைப் பழமாக்கி விடுகிறார். இவருடைய தந்தையார் திரு. எம். எஸ். பரம், சங்கீதம் செய்தல் ஒரு வைரவக்குறைவான செயல் என்ற மூடக்கருத்து வாழ்ப்பாணத்திலே பரவியிருந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பிரபலமான ஓர் இசை ஞானியாக விளங்கியவர். வட இலங்கை சங்கீத சபையில் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்த வாழ்ப்பாணத்து இசைக் கலைஞர்கள் இன்று கட்டி வெழுப்பிய இசைக்கோயிலுக்கு அடிக்கல் நாட்டிய ஒரு முன்னோடி. திக்கியின் சகோதரியும் ஒரு சிறந்த பாடகி.

வாழ் சங்கீத சபையில் இவ்வருடத்து முதலாவது கச்சேரியில் சென்ற வியாழக்கிழமை இரவு பரம் திக்கி ராஜா பாடியபோது அற்புதமான சுவையோடும் கூடிய உணவை நாவார்ச் சுவைத்த வயிறார உண்ட உணர்வு நிறைவு ஏற்பட்டது. கச்சேரிக்கு ஆவர் தெரிவுசெய்திருந்த ராகங்களும் உருப்படிகளும் அவை அமைந்திருந்த தாளங்களும் கர்நாடக சங்கீதத்தின் பூரண அழகுப்பொலிவையும் சாகித்திர நுட்ப லக்ஷணங்களையும் உள்ளடக்கியிருந்தன. கருத்தட்டோடும் அழுத்தம் திருத்தமான மிடுக்கு சரீரம். கனிவான வைக்கட்டுப்பாடு போலி பிர்க்காக்கள். இவ்வாறு சுத்தமான பாணி, உழைப்பால் உயர்ந்த நெடுகு - இவை எல்லாம் ஒன்று சேர்ந்து ஆன்றோர் கச்சேரிக்கு அழகு செய்தன. கனமான ராகங்களையும் உருப்படிகளையும் அவைக்கேற்ற சாஸ்திர ரூபத்தோடும், இசைசான மெல்லிய பாடல்களை அவைக்குரிய லலிதமான தளுக்கோடும் பாடினார். இந்த இரண்டாவது வகையிலுள்ளவற்றை திக்கி தாமும் மிக அனுபவித்துப் பாடுவதுபோலிருந்தது அந்த நாவடிசிந்த ஒன்றுக்கே பெற்றிழி வழங்கலாம். (இலங்கையில் தமிழ்ப்படம் பிடிப்பவர்கள் 'நோட்' பண்ணிக்கொள்க பின்னணிப்பாடுக்கு வேறு எங்கேயும் போகத் தேவையில்லை.)

சங்கீதசபை மண்டபம் ஆறு நிறைகுடமாக விளங்கெதிக் கிடப்பிக்கே. நல்ல பாட்டுக்கேட்டோம் என்று நம்பியவந்தவர்களை திக்கி ராஜா ஏமாற்றவில்லை. இந்த முந்திய கச்சேரிகளில் ரசிப்பெருமக்களைக் காண விக்கிறதே என்று அழுது கொட்டிய எனக்கு இது பரமதிருப்தி அளித்தது.

— வி. என். பி. —

'அம்மா உமா' என்ற கே. கி. தியாகராஜனின் அற்புதமான சாகித்தியத்தோடு கச்சேரி நன்கு கலைகட்டி விட்டன. இதன் ராகமான ஆபேரி நிழற்சி நிரவிக் 'ஆஹிரி' என்று தவறாக அச்சிடப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு, பாவம் திக்கிராஜாவுக்கு இவ்விரவு 'மனத்தில்' ஆடி கிடைக்கப் போகிறதே என்று பயந்து விட்டேன்! அதைத் தொடர்ந்து வரைரப்பியா, பட்டாணி சாரங்கா, கல்யாணி, ரஞ்சனி, கல்யாணவசந்தம், ஜோதிஸ்வரூபினி, மலயமாருதம், நாதநாமக்கிரியை, முதலிய ராகங்களில் உருப்படிகள் வந்தன. ஆரோகணமாக எல்லா உருப்படிகளும் கனிசமான அளவுக்கு ராகஆலாபனையும் எற்பஞ்ஸ் வரும் பாடப்பட்டன. பாடகருக்கு ரஞ்சனி ராகம் வானாமாக வை வந்தது போலும், உண்மையில் அது ரஞ்சமாகவே இருந்தது. கல்லவிலைரகி ராகத்தில் அமைந்திருந்தது. கண்ட ஜாதி தாளத்தில் நாலு களை சவுக்கத்தில் அதிக எடுப்பு பக்கவிக்கு எடுப்பாகத் தாளிருந்தது.

நிறை மதிக்கும் மருவுண்டு திக்கிராஜாவின் பாட்டிலுள்ள ஒரு குறைவை, அது அவ்வளவு பெரியதாகிவிடாவிடினும், எடுத்துக் காட்டாமல் விட்டால் விமர்சகன் என்ற முறையில் எனது கடமை முற்றுப்பெறமாட்டாது. அத்துடன் பாடகருக்கும் ரசிகர்களுக்கும் நான் வஞ்சனை செய்தவனாவேன். பாட்டுக்கு இசையும் மெட்டும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு சாகித்தியமும் முக்கியமானது. வார்த்தைகளை 'ஆக்சர பட்சணம்' செய்யப்படாது. 'கானமுதானம்' என்ற சொற்றொடரில் இசை அலங்காரத்துக்காக 'கானா... அமுதா... அபானம்' என்று பாடுவது கலையாகிவிடுகிறதா! தெலுங்கோ, தமிழோ, சமஸ்கிருதமோ சாகித்தியத்தில் அர்த்தமிருக்க வேண்டும்.

வயலின் வி. கே. குமாரசாமி மிக விரைவில் எழுந்து குப்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையாக வந்து கொண்டிருக்கிறார். உருவத்தில் மட்டுமல்ல பக்கவாத்தியம் வாசிப்பதிலும் தான். சந்தானகிருஷ்ணனின் மிருதங்கத்தில் முதுபூபதியின் லயவாசம் தெளிகிறது. புல்லாங்குழல் மூர்த்தி ஐயரின் புதல்வர் ராமநாதன் மிக அழகாக மோர் சிந்தியிருந்தார்.

சிவஞானபோத விரிவுரை

யாழ்ப்பாணம், வெள்ளி

சிவஞானபோத தொடர் விரிவுரையை நடாத்தும் பொருட்டு காஞ்சி மெய்கண்டார் ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரது விரிவுரைகள் சுமார் ஒருமாத காலத்திற்கு நடைபெறும். தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விரிவுரைகள் நல்லூர் கோவில்வீதி 165-ம் இலக்க இல்லத்திலே நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை திரு. க. இராஜசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

டெற்ரோல்

கிருமிகளைக் கொன்று உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கிறது

ஆபத்தான கிருமிகள், உங்கள் சுற்றும் புறங்களில் சூழ்ந்திருக்கின்றன. இந்தக் கிருமிகள், உங்கள் உடம்பில் பல வழிகளிலும் நுழைந்து, நோயும், நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும். அக் கிருமிகளிலிருந்தும் பாதுகாப்பும் பெற டெற்ரோல் பாவியுங்கள்.

வெட்டுகள், கிராய்ப்புகள், புண்கள், பூச்சிக் கடிகளுக்கு டெற்ரோல் பாவியுங்கள். அது கிருமிகளைக் கொன்று சீழ் பிடிப்பதைத் தடுக்கிறது. பிளாஸ்திரி மட்டுமே இடுவதால் ஆபத்தான கிருமிகள் உள்ளே அடைபட்டுச் சீழ்ப்பிடிப்பை உண்டாக்குவன.

டெற்ரோலை, குளிக்கும் தண்ணீரிற் சேருங்கள். குளியற் தொட்டியிற் சேர்த்த டெற்ரோல், உங்கள் குடும்பத்தை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும்.

டெற்ரோல், மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கு உகந்தது.

டெற்ரோல், தேகத்துக்கேற்ற தொற்று நாசினியெனினும் நோய் நிலவும் வேளைகளில் நோயாளிகளின் துணிகளையும் கழிகூடங்கள், தரைகளையும் நோய்த் தொற்றறச் செய்யவும் அதைப் பாவிக்கலாம். நோய்த் தொற்று பரவுவதை அது தடுத்துவிடும்.

ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

உலகமெங்குமுள்ள டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்ரோல். ஏனெனில் அது சக்தி வாய்ந்த நம்பகமான தொற்று நாசினி என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிவார்கள்.

P D126

சகல மதங்களுக்கும் ஒரேவிதமான இடம்தருக'

கொழும்பு, வெள்ளி

நாடிலுள்ள சகல மதங்களுக்கும் ஒரேவிதமான சலுகைகளும் பாதுகாப்பும் அளிக்கப்படவேண்டும் என அரசாங்கத் தமிழ் தகவெழுத்தாளர் சங்கம் புதிய அரசியல் திட்டத்திற்குத் தெரிவித்துள்ள மாற்ற யோசனையில் தெரிவித்துள்ளது.

மதச் மனித வாழ்க்கையின் ஆதார ஸ்டேற்றத்துக்கான ஏற்றிட்டது. அதில் பெரும் பான்மையோராயினும் சிறுபான்மையோராயினும் ஆனாலின் நோக்கமும் "மோக்ஷம்" என்பதொன்றேயாகும். எனவே இதில் பாகுபாடு அற்றி எல்லா மதங்களுக்கும் அரசியல் அமைப்பில் ஒரேவிதமான இடம் கொடுக்கப்படவேண்டும் என்று மேற்படிச் சங்கம் அரசியல் திட்டத்துக்கு தெரிவித்துள்ள திருத்தத்தில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பூராவிலும் சிங்களமும் தமிழும் அரசகரும மொழியாக ஆக்கப்படுவதுடன் ஆங்கிலமும் இரண்டாவது மொழியாக்கப்படவேண்டும் என்றுச் சங்கம் கோரியுள்ளது.

சட்டவாக்க மொழி நீதிமன்றமொழி ஆகியவற்றுக்கு திருத்தங்களை சங்கம் சமர்ப்பித்துள்ளது.

உபவேந்தராக அபேவிக்கிரம நியமனம்

கோட்டை, வெள்ளி

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தராகக் கடமையாற்றிய பேராசிரியர் பி. ஏ. அபேவிக்கிரம ஒன்றுபடுத்தப்பட்ட இலங்கையின் ஒரே பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக கல்விஅமைச்சர் அக்ஹாஜ் பதியுதீன் மாமூதினால் நியமிக்கப்பட்டுள்ளார். .....

"தமிழ் கற்பிக்கவும்"!

பதுளை, வெள்ளி

"பதுளை மாவித்தியாலயத்தில் மூன்றாவது பாடமாகத் தமிழ் மொழியைப் போதிக்க நடவடிக்கை எடுக்கவும்."

இவ்வாறு பதுளை மாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் போது தீர்மானிக்கப்பட்டது. மாவித்தியாலயத் தலைமையாசிரியர் திரு நந்தசேன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதாக விட்டும் நன்மைகள் பற்றி விளக்கப்பட்டது.

அரசியல் அமைப்பும் அவசரகால நிலையும்

கோட்டை, வெள்ளி

"தற்போதைய ஆட்சியின் தத்தின் காலத்தை 5 வருடமாக நீடித்தால் வாக்குரிமை பெறும் இளைஞர்கள் அதைப் பாவிக்க இயலாது இழந்தவர்களாவார்கள். இளைஞருக்கும் முதியோருக்கும் தொடர்பை ஏற்படுத்த வேண்டிய இவ்வேளையில் இக்கால நீடிப்பால் இத் தொடர்பு பாதிக்கப்படும்"

மேற்கண்டவாறு வண. பிதா திஸாபாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

செல்வாய்க் கிழமையன்று அத்துவளக் மண்டபத்தில் நடந்த அரசியல் அமைப்புத் திட்டம் பற்றி நடைபெற்ற மாநாடொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே வண பிதா பாலசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலுந்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: அரசியல் திட்டத்தை ஆராய்வதற்குப் போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை. காலம் போதாமைக்கு காரணம் தற்போதைய சூழ்நிலையேயாகும். இச் சூழ்நிலையே மக்களை அரசியல் திட்ட தயாரிப்பாளர்கள் மறக்கும்படி செய்துள்ளது. அவசரகால விதிகளை நீக்கி அரசியல் திட்டம் பற்றி வெளிப்படையாகக் கூடி ஆராய மக்கள் அனுமதிக்கப்படவேண்டும்

பாதுகாப்பு நடவடிக்கை சம்பந்தமான விடயங்களைத் தவிர பத்திரிகைகளுக்கு ஏனைய விடயங்களை அரசு தணிக்கை செய்யக் கூடாது.

இம்மாநாட்டில் அரசியல் அமைப்புத் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வாவும் உரையாற்றினார்.

.....

யோனை யாருடையது?

சங்கானைச் சந்தையில் யோனையொன்றைக் கண்டெடுத்த க. நல்லப்பு என்பவர் சங்கானை பட்டினசபைமூலம் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்திருக்கிறார். உரியவர் நஷ்டஈடாரத்துடன் வந்து காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

ஓய்வு

கல்லியங்காடு, வெள்ளி

கோப்பாய்வலயக் கல்விப்பணிப்பாளராக இருபத்தொரு ஆண்டுகள் கடமையாற்றிய திரு வேலுப்பிள்ளை சண்முகநாதன் இம்மாதம் தொடக்கம் ஓய்வு பெற்றார். நீர்வேலியைச் சேர்ந்த இவர் முன்னர் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றினார்.

"உற்பத்தியை அதிகரிக்கவும்"

இரு நெசவாலைகளுக்கு அமைச்சர் உத்தரவு

கொழும்பு, வெள்ளி

தக்ஹிரியா, கிராண்கொடை நெசவு ஆலைகள் இரண்டும் வழமை ஒன்றுக்கு இரண்டு 8 மணிநேரம் 40 லட்சம் ரூபாவுக்கு நூலையும் 8 மணிநேரம் 80 லட்சம் மீட்டர் பூர்த்திசெய்யப்படாத துணியையும் 7 மணிநேரம் 40 லட்சம் பூர்த்திசெய்து விநியோகிக்கு தயாராக துணியையும் கண்டாக உற்பத்திசெய்து வருகின்றன.

கைத்தொழில் வர்த்திகம் திரு. டி. பி. சுபசிங்க இவ்விரு நெசவு ஆலைகளும் கூடிய விரைவிலே துணியில் இலக்கை சுவரேவலையைப் பூர்த்திசெய்ய வேண்டிய கூடிய முறையில் உற்பத்தி அதிகரிக்கவேண்டுமென அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (நா)

புதிய சந்தை

வவுனியா, வெள்ளி

வவுனியா நகரில் புதிய சந்தைமொன்று திறக்கப்பட்டுள்ளது. தொகுதி எம் பி திரு எக்ஸ் எம். செல்லத்தம்பு திறந்துவைத்தார்.

மகா கும்பாபிஷேகம்

[illegible] யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் கோணாவளை ஸ்ரீ பைரவசுவாமி கோவில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

கிரிவலை மாதகலைச் சேர்ந்த வெழுஸ்ரீ க. செல்லப்பாக் குருக்கள் பிரதிஷ்டா குருவாகவிருந்து நடத்திவைத்தார்.

0 0 0

திருக்கோணேசுவர ஆலயம் [illegible] மகாகும்பாபிஷேகத்தின் பின் கிரிவலம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. இக்கிரிவலத்தை திருமலையைச் சேர்ந்த சிவஸ்ரீ திரு. ம. கு. சிவசுப்பிரமணியக் குருக்கள் பிரதான குருவாக இருந்து நடத்திவைத்தார். சர்வசாதக போதாசிரியராக ஆலய இலக்கியச் சைவக்குருமார்சபைத் தலைவரும் திருநெல்வேலி முத்தக்குருவாரி அம்பாள் ஆலய ஆர்ச்சகருமான சிவஸ்ரீ திரு. சிவலோகநாதக் குருக்கள் இருந்து நடாத்திவருகிறார்.

.....

அராலியில் இன்று

மூத்தமிழ் விழா

அராலி, சனி

அராலி கலைத்துறை சைவமும் நிலையத்தில் 12 வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் மூத்தமிழ் விழா இன்று ஆரம்பமாகிறது. இவ்விழா 3 நாட்கள் நடைபெறவிருக்கிறது. அராலி கலைத்துறை வரவு ஆலய முற்றவெளியில் நடைபெறும் இவ்விழா நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் க. கந்தையா விரிவுரையாளர் திரு எம். எஸ். பத்மநாதனும், அராலி சரஸ்வதி வாணி வித்தியாலய இளை ஆசிரியர் திரு. எம். பாலசுப்பிரமணியம், திரு. இ. சந்தமுத்து ஆகியோரும் முறையே 1-ம், 2-ம், 3-ம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகிப்பர்.

முன்று நாட்களும் கலை, சமய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.



வீட்டதிபதியாகும் யோகம்

இவ்வாண்டில் உங்களுடையதே!

2ஆம், 11ஆம் வீட்டதிபதிகள் 9ஆம் வீட்டில் வலுப் பெற்றால் வீடு, திடீர் பணம் போன்ற யோகம் கிட்டுவது நிச்சயம். நீங்கள் என்ன இலக்கினத்திற் பிறந்திருந்தாலும் 1972இல் கிரகங்களின் செல்வாக்குப் பலமாகக் காணப்படுவதால் மேற் சொன்ன யோகம் உங்களுக்கு அதிக நன்மை பயக்கும்:

இதற்குக் காரணம் தேசிய லொத்தர் சபை சுவிப்டிக்கெட்டுகளுக்கு, நீங்கள் கனவு கண்டு வரும் வீடு ஒன்றினைப் பரிசாகப் பெறும் வாய்ப்பு விரைவில் உங்களுக்குக் கிடைக்கவிருப்பதே-ஆக-/50 சதம் அல்லது 1/- ரூபாய்க்கு.

விலைகளும் மிருதிப் பணமும் அதிவிரைவில் தேசிய லொத்தர் சபை டிக்கெட்டு கழகத்துப் பரிசுகளாக வழங்கப்படவுள்ளன. ஆனால் நீங்கள் வீட்டுக்குப்பதில் காசை விரும்பினால். காசை மட்டும் பரிசாகப் பெறலாம்—சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை.

தே. லொ. ச. சுவிப்பில் யாரும் பரிசு பெறலாம்; யாராவது எப்போதும் பெற்றே வருகிறார்! அடுத்த பரிசு உங்களுடையதாகிக்கலாம், உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள் ஆக ஒரு ரூபாய்தானே செலவாகும்



வென்றாலும் தோற்றாலும் இலாபம் உங்களுக்கே.

தேசிய லொத்தர் சபை

இன்றைய பலன்

தை மாதம் 15-ந் திகதி
[29-1-72]

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

மேஷம்: குருவின் ஆசியுடன் குறிக்கோளும் வெற்றியாகும். குன்றென நிமிர்ந்து நிற்பீர். குதித்தோடும் புகழும் தானே.

ரிஷபம்: லாபச்சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம். வரவிலும் திருப்தி காணப்படுகின்றது. முன்னேற்றமான தினம்.

மிதுனம்: குடும்பத்திற்கு பணி தலை தூக்கும். இதன் மூலம் வைத்திய செலவுகளுக்கும் இடமேற்படும். இறை நம்பிக்கை நன்று.

கடகம்: நீண்ட பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப் படலாம். பொருள் கவிட்டுப் போவதற்கும் இடமுண்டு. அலைதி நன்று.

சிம்மம்: மனதிற்கு மகிழ்ச்சியைத்தரும் சம்பவங்கள் இடம் பெறும். குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும்.

கன்னி: எதிலும் சோர்வு தென்படும். ஆதரவு காண்பவர்களே உங்களை அலக்கழிப்படுத்துவதற்கு முனைவார்கள்.

துலாம்: புதிய இடங்களில் இருந்து உங்களுக்கு ஆதரவு வரலாம். எதிர்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள்.

விருச்சிகம்: பணம் தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட தேவதையின் ஆசீர்வாதம் உண்டு. சிறப்பான தினம்.

தனுசு: சந்தர்ப்பத்திற்கேற்றவண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும். மேலிடத்தில் வாழ்த்தும் கிடைக்கக்கூடும்.

மகரம்: தற்செயலாக தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும். பொருளும் பணமும் வீணாக செலவாகும். பொறுமையைப் பேணவும்.

கும்பம்: சிறு விடயங்களைக் கூட அதிக ஆர்வத்தைத் தரலாம். விஞ்ஞான சாதனைகளும் மேற்கொள்ளக்கூடும். சிந்தித்து பின் செயலாற்றவும்.

மீனம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள்.

தரம் உயர்ந்தது

மாவிட்டபுரம், வெள்ளிசாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த நுணாவில் கணேசவித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்படி வித்தியாலயத்தின் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. க. சின்னத்தம்பி எடுத்த முயற்சியால் தரக் குறைப்பு நிறுத்தப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

Cockroaches?

BAYGON (BAYER)
wipes out pests!
பேகோன்
ஹெகெம்
லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு.

வயோதிபரை வான் மோதியது

கல்லியங்காடு, வெள்ளி

வான் ஒன்றினால் மோதப்பட்ட வயோதிபர் ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இந்த வான் கல்லியங்காட்டுச் சந்தியைக் கடக்கமுயன்ற குரைப்பிள்ளை என்பவருடன் மோதிநின்றது. குரைப்பிள்ளை படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

— —

விவசாய கலிவிக்கு நில ஒதுக்கீடு

கோப்பாய், வெள்ளி

கல்விஅமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் கடந்த வாரம் முதல் யாழ்சாலைகளில் மாணவர்கள் விவசாயக் கல்வியைக் கற்பதற்காக நிலங்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே இந்த நிலஒதுக்கீட்டின் அளவு இருக்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

.....

பள்ளாதேஷை—

[5ம்பக்தொடர்ச்சி]

டனும் பாகிஸ்தான் தனது உறவை முறித்துக்கொண்டு விட்டது. தேசாபிமான ஆவேச நாடுகளிலிருந்து தனது தூதர்களை பாகிஸ்தான் திருப்பி அழைத்து விட்டது.

தலவாக்கொல்லையில் தைபூச விழா

தலவாக்கொல்லை, வெள்ளி

தலவாக்கொல்லை நகரமத்தியிலுள்ள கதிரேசப் பெருமானின் வைப்பூச உற்சவம் வழமைபோல் இம்முறையும் மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது

அன்ன காவடி நாதஸ்வரமும் பிற்பகல் 2 மணி முதல் ஈழத்தில் தலைசிறந்த நாதஸ்வர மேதைகளின் நாதஸ்வரக்கச்சேரியும் நடைபெறும் இரவு 7 மணிக்கு ஸ்ரீ கதிரேசப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதம் மணவிழாக் கோலத்துடன் முத்துச்சப்பரத்தில் நகர வீதிவலம் வருவார். விசேஷ அலங்கார நிகழ்ச்சிகளாக யாழ்ப்பாணம் கோப்பாய் நவநாதவிநோதன் திரு. பி. தியாகராசாவின் நாதஸ்வரமும் இசை இடம்பெறும்

.....

34-வது இலக்க மகாஜனசம்பத சீட்டிழுப்பு

கொழும்பு, வெள்ளி

மகாஜனசம்பத சபைப் 34-வது இலக்க சீட்டிழுப்பு இம்மாதம் 31-ந் திகதி மாலை 5-15க்கு நாவலப்பிட்டிய ஜயதிலக் பூங்காவில் நடைபெறும். இவ்வைபவ ஆரம்பத்தில் தேசியக் கொடியை நாவலப்பிட்டி பஸ்டியன்சபைத் தலைவர் ஜனாப் எச். எம். எம். பதியுதீன் ஏற்றிவைப்பார்.

பரிசுக்குரிய முதல் மூன்று டிக்கெட்டுகளையும் முறையே நாவலப்பிட்டி ஆஸ்பெஸ்ற உறுப்பினர் திரு. எம் எஸ்.

பாரதி பேத்திக்கு யாழ். நகரில் வரவேற்பு

குருநகர், வெள்ளி

பாரதியின் பேத்தியாரான விஜயபாரதி அவர்கள் ஆண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் போது அவருக்கு வரவேற்பு விழா ஒன்றை நடத்துவதற்கு நல்லைபாரதிமன்றம் ஏற்பாடு செய்துவருகின்றது.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள விஜயபாரதியை அழைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ள திரு. சே. பாலச்சந்திரனுடன் நல்லூர் வரவேற்பு பற்றி பேசுவதற்காக நல்லை பாரதிமன்றத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் நேற்று கொழும்பு சென்றுள்ளார்.

இவ்வரவேற்பு விழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தியாகப் பிரம்ம ஆராதனை விழா

கழிபுரம், சனி

பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தான மண்டபத்தில் ஸ்ரீ தியாகப் பிரம்ம ஆராதனை விழா இன்று நடைபெறவுள்ளது. விசேஷ ஆராதனைகளும் இசைக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன

கலுத்ஹமகே, ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஜே. டி. வீரசேகரா, மகிந்தேவிர உறுப்பினர் ஆரியதிலக இருப்பார்களே.

திரு. ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சாமினி ஆரியதிலக ஆகியோர்

மதவுக்குள் சிதையின் சடலம்

பருத்தித்துறை, வெள்ளி

துன்னாலையிலுள்ள நுணாவில் கிழக்கு ஆலயத்தின் ஆண்மையிலுள்ள ஒடு மதவுக்குள் சமீபத்தில் பிறந்த இரு ஒன்றின் சடலம் சாக்கினால் மூடப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டது. பருத்தித்துறை நெல்லியடிப் பொலிசார் தீவிரபுலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

.....

யாழ். கோஷ்டி - கூற்றடை

உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்; சனி

யாழ். மாவட்ட உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டிக்கும், இலங்கை கடற்படைத் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் கொழும்பில் இன்று நடைபெறவிருந்த "ஸாக் அரை இறுதிப் போட்டி" ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால், மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடாத்தியிருக்கும் உதைபந்தாட்டக் கற்றுப் போட்டியின்கீழ் மேற்படி இரு கோஷ்டிகளும் இன்று கொழும்பில் மோதவிருந்தன

இன்று போயா தினமான தினம் இப்போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ் உதைபந்தாட்டச் சங்க உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். [தே நி]

வெள்ளை ஆடைகளை
எவ்வளவுதான் கழுவினாலும்
பரிபூரண வெண்மையை
அடையமுடியாது.
உங்களுக்குத் தேவையானது
ரொபின் நீலம்!

சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான். ஆனால் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினாலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு ரொபின் நீலம் தேவை.

ரொபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனால் முடிவில் ரொபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

ஆடைகள் வெண்மையாகப் பளபளப்பாகப் பிரகாசிக்க ரொபின் நீலம் பாவியுங்கள்.
ஆர் ரெகிட் அண்ட் கோல்மன் உற்பத்தி.

கள்ளக்கடத்தல்; மேசாடி

சிந்தி சாமியாரை தடுத்து பொலிஸ் விசாரணை

சொழும்பு, வெள்ளி

இரத்தினக்கல் கடத்தல் அந்நிய செலாவணி மோசடி சம்பந்தமாக புனர் விசாரணை செய்து வரும் துப்பறியும் பொலிசார் சில தினங்களுக்கு முன்னர் சிந்திச் சாமியார் ஒருவரைக் கொழும்பில் வைத்து விசாரணைசெய்தனர்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமானத்திலிருந்து சிந்திச் சாமியார் இறக்கப்பட்டார். அவருடன் வேறுவரும் தொடர்பு கொண்ட இடமளிக்கப்பட்டிருக்கிறது. விமான நிலையத்திலிருந்து வந்த பாதுகாப்புடன் கொழும்புக் கோட்டையிலுள்ள புதிய செலவகத்தின் நான்காவதுமாடியிலுள்ள பொலிஸ் துப்பறியும்பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்ட சிந்திச்சாமியார் ஆங்கு சிரேஷ்ட அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டார். இதன் பின் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இரத்தினக்கல் கடத்தல் அந்நிய செலாவணி மோசடி சம்பந்தமாக பெரிய புள்ளிகள் உட்படப்பலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. தங்க மோசடியிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பொலிசார் கருதுகின்றனர்.

இந்த மோசடிசம்பந்தமாக முக்கிய தகவல்களை இந்தச் சிந்திச் சாமியாரிடமிருந்து பெற முடியுமெனப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே பொலிசார் அவரை விசாரணை செய்தனர்.

இந்தச்சாமியார்பற்றி இந்திய கடல்பகுதியிலும் அவதம்பிக்கை கொண்டுள்ளனராம். தங்கம் கடத்திய தாக கடல்ப் பகுதியினராக இவர் முன்பு விசாரணை செய்யப்பட்டாராம்.

இதேவேளை ஜிரோப்பாவிலிருந்து கொழும்பிலுள்ள புத்தகவியாபாரி பொருவுக்கு வந்தபார்சலிலும் தங்கப்பாளங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச கள்ளக்கடத்தல் குழுவில் முன்னணியிலுள்ள வர்களில் இருவர் ஒருவர் எனப் பொலிசார் கருதுகின்றனராம்.

பாதுகாப்புச் சேவையை அரசு எடுத்து நடாத்தும்

சொழும்பு, வெள்ளி

அரசாங்க பாதுகாப்புச் சேவையொன்றை ஆரம்பிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தனிப்பட்டவர்களால் இப்போது நடாத்தப்பட்டு வரும் பாதுகாப்புச் சேவைகளையும் துப்பறியும் சேவைகளையும் அரசாங்கம் எடுக்க விருப்பதாகவும் இவற்றை விலக்கி பொலிஸ் பகுதியில் 'றிசேர்வ்' பிரிவாக இயங்கச் செய்வதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும் எனக் கருதப்படுகிறது.

700 ஆலோசனைக் கடிதங்கள்

கோட்டை, வெள்ளி

புதிய அரசியல்திட்டத்தின் வெவ்வேறு பிரிவுகள் பற்றிய மக்களின் கருத்துக்கள் பெறுதற்கான வாக்கு அரசியல் நிர்ணயசபைக்குள் கிடைத்துள்ளன.

இதுவரை 700 ஆலோசனைக் கடிதங்கள் சபைக்குக் கிடைத்துள்ளன. இந்தக் கடிதங்களைச் சபை அரசியல் திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்ட குழுக்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து அரசியல் நிர்ணயசபை அரசியல் திட்டம்பற்றிக் கருத்துக்கள் கோரியிருந்தமை தெரிந்ததே. கருத்துத்தெரிவிக்கும் கடைசித் திகதி இம்மாதம் 24-ம் திகதியெனச் சபை அறிவித்திருந்தது.

இன்னும் 85000 இருக்கிறதாம்

கொழும்பு, வெள்ளி

கடந்த வருடம் அரசாங்கம் கொடுத்த லைசென்சுகளை விடுத்து 85,000 வாகனோலி பாவனையாளர்கள் வாகனோலி லைசென்ஸுகளைப் பெற்றுள்ளார்கள்

ஆனால் நாட்டில் மேலும் 85000 லைசென்ஸ் பெறாத வாகனோலிப்பெட்டிகள் இருப்பதாக தந்தித் தொடர்பு இலாகா நம்புகிறது. (நா)

புதுடில்லி ஜன 18

இந்திய மத்திய ராஜ்ய மந்திரி திரு பி சி சேதி மத்திய மாநில முதல் மந்திரியாக நாளை முற்பகல் பதவி ஏற்கிறார்.

தீவுப்பகுதி நூல்விநியோகம் பற்றி எம்.பி.

வேலணை, வெள்ளி

"தீவுப்பகுதிக்கு ஒரு தனி சமாஜத்தை நிறுவ கல்வி மூலம் நூல்விநியோகிப்பதன் மூலம் தீவுப்பகுதி நெசவு நிலையங்கள் நூற்பெறுவதில் கஷ்டம் குறைவுடன் விரிவாகவும் ஒழுங்காக நடைபெற ஏதுவாகும். வேலணை ப. நோ. கூ. சங்கமூலம் நூல்விநியோகத்திற்கு எமது தொகுதி எம்.பி. ஆவன செய்யவேண்டும்." என்று வேலணை 8-ம் வட்டார அரசினர் நெசவு நிலையத்திலிருந்து ஆங்கே தீவுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் திருமதி துரைராஜா புஷ்பவதிக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைவைபவத்தில் பேசிய திரு. நா. வீரசிங்கம் கூறினார்.

சிலைமையாக நிலவிவரும் நூல் தட்டுப்பாடு காரணமாக நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ள ஆநேர் வேலை விழக்கும் நிலைமையிலுள்ளதாக அவர் சொன்னார்.

நலைவைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய தொகுதி எம்.பி. மண்டிதர் வ. வை. இரத்தினம், நூல் தட்டுப்பாடினை நீக்குவதற்குத் தாம் பாடுபடுவதாக நமதுரையில் கூறினார். திருமதி புஷ்பவதியின் சேவையை எம். பி. பாராட்டினார். இந்நெசவு நிலையத்தில் புதிதாக நியமனம் பெற்றுள்ள ஆசிரியை செல்வி ஆ. இந்திரா தேவிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவாளர்கள் நா. நாகலிங்கம், ச. கைலிநாதன், ச. சபாரத்தினம் உட்படப் பலர் பேசினர்.

மரண அறிவித்தல்

ஆ. சதாசிவம் (சாதிரியார்)

செல்லமுத்துவின் அன்புக் கணவரும், இராமேந்திரம் பரந்தாமன் தியாகராஜா, ஆகியோரின் தந்தையும் சரஸ்வதி, சரோஜினி ஆகியோரின் மாமனாரும் ஆறுமுகம் சதாசிவம் காலமாகிவிட்டார். பூதவுடல் கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு ஈமச்சடங்கிற்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அறிவிப்பவர் ஆ. ச. பரந்தாமன். 3951

'நீதியான போராட்டம் வெல்லும்'

குருநகர், வெள்ளி

கண்ணியமிக்கும் நீதிக்கும் போராட்டம் நடத்தினால் அதில் வெற்றிகிடைக்காமல் போகாது. நீதியும் நியாயமும் எந்த இடத்திலும் வெல்லும். மனச்சாக்கி உள்ளவர்கள் எப்பொழுதும் நியாயத்தை ஒப்புக்கொண்டே ஆவார்கள்; ஆனாலும் பேச்சுவார்த்தைக்கிடை ஒற்றுமைப்பட்ட போராட்டமே தொழிலாளர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

இவ்வாறு வடமராட்சி கடுக்குத்தொழிலாளர் மத்தியில் பேசிய அகில இலங்கை ஐக்கிய கருட்டுத்தொழிலாளர் சங்கத்தலைவரும் யாழ். நகரபிதாவுமான திரு. ஆ. துரைராசசிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள கருட்டுத்தொழிற்சாலை ஒன்றில் கலி குறைப்பால் தொழிலாளர் மத்தியில் எழுந்த வேலைநிறுத்த நிலைமையை சீராக்கி, உரிய சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபின் தொழிலாளர் மத்தியில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

தொழிலாளர்களது கலியைக் குறைப்பதற்கு முதலாளிகள் எந்தவித சதிநடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் தொழிலாளர்களது ஒற்றுமை இருந்தால் அது முறியடிக்கப்படுவது உறுதி 1938-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை காலத்துக்குக் காலம் தேவையையும் நியாயத்தையும் முன்வைத்து 18 முறை போராட்டம் நடத்தி வந்திருக்கின்றோம். எமது போராட்டம் தொழிலாளரது ஒற்றுமையாலும் நியாயமான கோரிக்கைகளாலும் வெற்றிபெற்று வந்திருக்கின்றது. எனவே இன்று நாம் கேட்டிடுக்கும் சம்பள உயர்வும் நியாயமானதும், நீதியானதுமேயாகும்.

சிரமதானம்

யாழ்ப்பாணம், சனி

கனிஷ்ட மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்ட வெற்றிலைக்கேணி ஸ்ரமேஸ்வரா வித்தியாலயத்தின் வேலி சிரமதான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்-ஆஸி இன்று

யாழ்ப்பாணம், சனி

ஆஸ்திரேலிய பாடசாலை கிரிக்கெட் கோஷ்டிக்கும், வடமராண பாடசாலை மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையேயான கிரிக்கெட் போட்டி இன்று யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டி இன்று காலையும் காலை 10-40க்கு ஆரம்பமாகி 12-40 க்கு மதியபோசனத்துக்காக நிறுத்தப்படும் 1-20-க்கு ஆரம்பமாகி 3-20-க்கு பிற்பகல் தேநீருக்காக நிறுத்தப்படும். பின் 3-40க்கு ஆரம்பமாகி 5-40 க்கு முடிவடையும்.

இந்தப் போட்டிக்கு திரு வரதர்கள் இசற், சிவராசாவும், பி. மகேந்திரனும் மத்தியஸ்தர்களாகக் கடமை பாற்றுவார்கள். (தே. நி.)

இசைக் கல்லூரி ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், சனி

கல்லூரி-வட கிழக்கு சனசமூகநிலையத்தில் யாழ். இசைக்கல்லூரி ஆரம்பவிழா இன்று திரு நா. செல்லப்பா தலைமையில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரித் தமிழ்க் கலை மன்ற மாடசாலையில் நடைபெறும்.

இவ்விழாவில் சமூகசேவைப் பகுதி உதவி ஆணையாளர் திரு. ஏ. சி. நாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சுவாமி ஸ்ரீமதுஞானந்தா யோகாசிரியரின் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்வுடன் சிறுவர் நாடகமன்றத்தின் 'உலகமேல் ஆசை' என்ற சமூக நாடகம் ஆகியவையும் இடம் பெறும்.

காணிக்கை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், சனி

மிருதலைக் கோட்டை காணிக்கை மாதா தேவாலய வருடாந்த திருநாள் ஜனவரி 25-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மாசிமாதம் 1-ம் திகதி இரவு வேல்யர் ஆராதனை நடைபெற்று திருநாள் காலை 8-ந் திகதி பாடற்பூசையும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவுறும்.

கல்வியின் மகத்துவம்

யாழ்ப்பாணம், சனி

கல்வியினால் மேன்நிலைக்கு வந்ததும் கீழ்நிலையிலுள்ளவர்களைக் கவனியாது இருக்கக்கூடாது"

உடுப்பிட்டி நாவலர் சன சமூகநிலையம் செல்வி வா. பிள்ளைக்கு அளித்த சேவை நலம் பாராட்டு விழாவில் திரு இ. வே. செல்வரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

சனசமூகநிலைய சிறுவர் பாடசாலை ஆசிரியையாகக் கடமையாற்றிய செல்வி பிள்ளை அரசாங்க ஊழியராகச் சேர்வதை முன்னிட்டு இப்பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

ஆசிரியர் திரு த. கனகரத்தினம் தலைமையில் இப்பாராட்டுவிழா நடந்தது.

டாக்டர் எஸ் ஏ குணரித்தினம் பேசுகையில் சிறுவர்களின் கல்வியில் தாய்மார்கள் கூடிய கவனமெடுத்தால் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களைப் பெறலாம் என்று கூறினார்.

திரு நா நடேசன் பேசுகையில் பெண்கள் சமூக சேவையில் ஈடுபட்டுழைக்க வேண்டுமென்றார்.

மற்றும் பலரும் பேசினர்.

சமுதாய மதிப்பை பெறும் ஆசிரியர்கள்

மருத்துத்துறை விவா.

"கலாநிதி மூன்று தலைமுறைகளுக்கு பயிற்சியளித்த ஆசிரியர்கள் நமது மத்தியில் உள்ளனர். இவர்களுக்கு மாணவர் மத்தியில் மட்டுமன்றி, பொதுவாக முழு சமுதாயத்திலேயும் மதிப்பு உண்டு. இவ்வித ஆசிரியர்கள் கல்வித்துறையில் மட்டுமன்றி வாழ்க்கைத்துறையிலும் புத்திமதி கூறக்கூடிய அனுபவமும் ஆற்றலும் பெற்றுள்ளனர். எனவே ஆசிரியரை நிர்வாக வசதிகளுக்காக இடமாற்றம் செய்வதால் சமுதாயம் இவர்களின் சேவையை இழக்க நேர்கிறது."

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. க. சிவநிதம்பரம் மேற்படி வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெறும் திருவாளர்கள்: வி. வீரத்தி, எஸ் மயில்வாகனம் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பேசும்போது குறிப்பிட்டார். திரு. ந. பாலேந்திரா

தியாகப்பிரம்ம ஆராதனை விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீநியாகப் பிரம்ம ஆராதனை விழா, கொக்குவில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை தொடக்கம் இரவு வரை நடைபெறவுள்ளது. ஸ்ரீஸ்ரீ சுவாமி நாதந்த ம் பிரான் சுவாமிகளது உபந்நியாசமும், பல இசைவித்துவான்களின் இசை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

எழுவைதீவு ச. ச. நிலையம்

யாழ்ப்பாணம், சனி

எழுவைதீவு மணிவாசகர் சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு நா சண்முகரப்பிள்ளை. உப தலைவர்: திரு மு கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு ஆ தேவசகாயம் உப செயலாளர்: திரு ஐ கனகசபை, பொருளாளர்: திரு சி நடராசா, மலர் சோதனர்: திரு வை ஆறுமுகம்

தலைமைதாங்கினார். திருவாளர்கள் எஸ். தியாகராஜா பிள்ளை, ஏ. தாமோதரம், எஸ். சின்னத்தம்பி ஏ. சிவலிங்கம் ஆகியோரும் பேசினர்.

இப் பத்திரிகை "தமிழநாடு" லிமிடெட் அதிபரினால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.